DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர்.விஜயகுமார் | Caste | : | |
| Father Name | : | இராமசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **17.02.2026.**

**PW - 21**

**(1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், துறையூரில், அன்னை மருத்துவமனை என்ற பெயரில் மருத்துவமனை நடத்தி வருகிறேன். கடந்த 25.05.2019 இல் மாலை 4.00 மணிக்கு மருத்துவமனையில் இருந்த போது, சிதம்பரம் த/பெ. பெரியசாமி, எரகுடி என்றவர் சாலை விபத்தில் காயம் ஏற்பட்டதாகவும், அதற்காக அன்று காலை எரகுடியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி சிகிச்சை பெற்று வீட்டிற்கு சென்று விட்டதாகவும், அதன் பிறகு மயக்கம் வந்ததால் மீண்டும் எங்கள் மருத்துவமனைக்கு வந்ததாகவும் கூறினார். அவரை பரிசோதித்த போது சுயநினைவுடன் இருந்தார். அவரை சிறிது நேரம் எங்கள் மருத்துவமனையில் மருத்துவ கண்காணிப்பில் வைத்திருந்தேன். அதன் பிறகு அவருக்கு தலையில் எக்ஸ்ரே மற்றும் சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. அதில் அவர் சாதாரணமாக இருப்பதாக தெரிய வந்தது. அதன் பிறகு அவரை அன்று

இரவு 10.00 மணிக்கு எங்கள் மருத்துமனையில் இருந்து விடுவித்தேன். அவர் எங்கள் மருத்துவமனைக்கு வந்த போது விபத்து பதிவேடு பதியவில்லை. சிகிச்சை விவரக் குறிப்பு மட்டும் பதிந்தேன். அந்த சிகிச்சை விவரக் குறிப்பு அ.த.சா.ஆ.8 ஆகும். ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>1,3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆய்வாளர்கள் என்னை விசாரித்த போதும் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் சொன்னேன். மேற்படி சிதம்பரம் எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தபோது அவருக்கு எரகுடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அளித்த சிகிச்சை விவரங்களை என்னிடம் காட்டவில்லை. மேற்படி சிதம்பரம் எங்கள் மருத்துவமனையில் 26.05.2019 மற்றும் 27.05.2019 ஆகிய தேதிகளில் மறுபார்வைக்காக வெளி நோயாளியாக சிகிச்சைக்கு வந்தார். அந்த தேதிகளில் அவருக்கு நான் சிகிச்சை அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

**2ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.